# வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்– 2017

| தரம் - 11 | மாதிரிப்பரீட்சை –I<br>வரலாறு | நேரம்:- 3 மணி |
|---|---|---|

பகுதி II

- ❖ **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது**
- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகபடத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. மல்வத்து ஓயா, மாணிக்க கங்கை, உடரஞ்சாமடம, வல்லிபுரம், கம்பளை, கிம்மதித்த, மின்னேரியா, எலகரக்கால்வாய், சல்வத்தொட்ட, காங்கேசன்துறை, கோட்டை, கோகன்ன (12 புள்ளிகள்)

ii. பாக்குநீரிணை, பத்தேவியா, செங்கடல், உரோம், பம்பாய், பாண்டிச்சேரி (06 புள்ளிகள்)

ஆ) i. மேல்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A 2ஆம் பராக்கிரமபாகு எதிரிகளை நாட்டிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது, பொருளாதார, சமய கல்வித்துறையின் வளர்ச்சிக்கு உதவிய அமைச்சர்

B அபயகிரி விகாரையைக் கட்டி குப்பிகல திஸ்ஸ தேரருக்குத் தானமளித்த மன்னன்

C நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக் கூடாதென சட்டம் இயற்றிய மன்னன்

D ஆபிரிக்காவின் தென்முனைக்குப் புயல் முனை எனப் பெயரிட்டவர்.

A,B ஆகியவற்றினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.



A

ii.
1. A ஆனால் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயரைத் தருக?
2. மேற்படி நிர்மாணிப்பு அமைந்துள்ள நதி எது?
3. A என்ற நிர்மாணிப்புடன் தொடர்புடைய துறை எது?
4. இந்த நிர்மானிப்பின் மூலம் அறிந்து கொள்ளக் கூடிய விடயம் யாது?



B

iii.
1. B ஆனால் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?
2. இக்கட்டம் அமைந்துள்ள வரலாற்றுக்கால நகரத்தின் பெயரைத் தருக.
3. மேற்படி கட்டத்தினை அமைத்த மன்னன் யார்?
4. இக்கட்டத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் கலைமரபு யாது?

## பகுதி II

02. (i) இலங்கையின் சப்பரகமுவா மாகாணம், தென் மாகாணங்களில் இரணைமடுப் படிவிற்குரிய சரளைக்கல் படிவுகள் கண்டெடுக்கப்பட்ட இடங்களை முறையே தருக. (3 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொள்ள விரும்பிய இடங்களின் அடிப்படை இயல்புகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக்கால மக்களின் மரணச் சடங்கு முறைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

iv) வரலாற்றுக் கால மக்களின் குடியேற்றத்தின் தன்மைகளை உதாரணங்களுடன் விளக்குக? (6 புள்ளிகள்)

03. i. இலங்கையில் அரசியல் ரீதியாக அதிகாரம் பன்முகப்படுத்தபட்டிருந்த காலத்தில் பின்வரும் A,B,C என்னும் பதவிப் பெயரால் குறிப்பிடப்படுபவர்களின் பணிகளைத் தருக.

A நகரகுத்திக

B ரூப அதெக

C பதகு (3 புள்ளிகள்)

ii. கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்கு முறையாக எழுதுக.

A முதன் முதலாக இலங்கையில் பாரிய குளங்களை அமைத்த மன்னன்

B I ஆம் விஜயபாகு மன்னனுக்கு உருகுணைப் பிரதேசத்தில் அடைக்கலம் வழங்கிய அதிகாரி

C ''தொட்ட போஜக'' என்னும் பதவிப்பெயரின் பொருள்

D கி.மு 250 ஆண்டை அண்மித்த கல்வெட்டுக்களில் இல்லத் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர்?

iii. புராதன காலத்தில் இலங்கையின் அரசியல் அதிகாரம் வளர்ச்சி பெறுவதில் பங்காற்றிய பருமக என்னும் பதவியால் குறிப்பிடப்படும் அதிகாரிகளின் பணிகள் இரண்டும் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இலங்கையின் அரசியல் அதிகாரத்தை முறையான விதத்தில உருவாக்குவதில் பெரும்பங்களிப்பினை வழங்கிய துட்டகைமுனு மன்னனின் பணிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

04. i. A,B,C எனக் குறிப்பிடப்பட்டிக்கும் பின்வரும் குளங்கள் அமைக்கப்பட்ட நதிககளைத் தருக.

A - கலாவாவி

B - திஸ்ஸவாவி

C - கவுடுலு வாவி (3 புள்ளிகள்)

ii. கீழே தொடக்கம் A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்கு முறையாக எழுதுக.

A புராதன இலக்கியங்களில் வைத்தியசாலையைக் குறிப்பதற்கு வழங்கப்படும் பெயர்

B சீனாவுடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட இலங்கையின் ஆட்சியாளன்

C ததவய என்று அழைக்கப்பட்டவரின் தொழில்

D சமூகரீதியாக ஒன்றுபட்டு செயற்பட்ட வர்த்தக சங்கத்திற்கு வழங்கப்பட்ட பெயர் (4 புள்ளிகள்)

iii. a. சேனைப்பயிர்செய்கைக்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கும் பெயர்கள் ஒவ்வொன்று தருக.

b. சேனைப்பயிர்ச் செய்கைக்கு நிலம் தயார்ப்படுத்தல் முறையைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அதில் செய்கைப் பண்ணப்பட்ட பயிர்களையும் தருக. (5 புள்ளிகள்)

iv. புராதன கால சந்தை நிர்வாகம் தொடர்பான சொரபொர வாவி தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் மூன்று காரணிகள் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

05. i. A,B ,C என்னும் சூழல் பாதுகாப்புக் தொடர்பான கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை

B உயர் நிலங்களில் உள்ள காடுகளை அழிப்பதன் மூலம் மண் அரிப்பு ஏற்படும்.

C மரஞ்செடிகளின் முகாமைத்துவத்தில் அரசினால் அமுல் செய்யப்பட்ட சட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(3 புள்ளிகள்)

ii. கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்குமுறையாக எழுதுக.

A முற்காலத்தில் இலங்கையின் வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயத்தின் பெயரைத் தருக.

B அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட வரி.

C நெற்செய்கையின் மூன்று போகங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

D Iஆம் பராக்கிரமபாகு மன்னனின் பிறந்த இடமாகக் கருதப்படும் புங்ககாம என்ற ஊரில், அவரது பிறப்பை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தூபி

(4 புள்ளிகள்)

iii. புராதன மக்களிடம் இருந்த சுதேச உணவுப் பழக்க முறைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. 3ஆம் விஜயபாகு மன்னனின் பணிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(6 புள்ளிகள்)

06. i. A - முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தினை ஆக்கிரமிப்பதற்கு உதவி புரிந்த பிரதானி

B - கி.பி 1594 இல் போர்த்துக் கேயருக்கு எதிராக போர் நடைபெற்ற இடம் எது?

C - கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த நாயக்க வம்சத்தின் முதல் ஆட்சியாளன்

மேற்படி வினாக்களுக்குரிய விடைகளை அதே ஒழுங்கு முறையில் எழுதுக.

(3 புள்ளிகள்)

ii. கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்கு முறையாகத் தருக.

A - கண்டி இராச்சியத்திற்குள் நுழைவதற்குத் தடையாக இருந்த கடினமான பாதை

B - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கு ஆலோசனை வழங்கிய பிக்குவின் பெயர்களில் ஒன்று தருக.

C - ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரத்தை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிய போது கண்டி இராச்சியத்தின் ஆட்சியாளன்

D - கண்டி இராச்சிய காலத்தில் விகாரைகளின் நிர்வாகத்தினைக் கவனித்தவர்கள்

(4 புள்ளிகள்)

iii. கண்டி இராச்சிய சமூக அமைப்பினை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சிய பொருளாதார அமைப்பினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(6 புள்ளிகள்)

07. i. ஆசியாவிற்கு வருகை தந்த மூன்று ஐரோப்பிய இனத்தவர்களைத் தருக.

(3 புள்ளிகள்)

ii. ஐரோப்பியரின் கீழைத்தேச வர்த்தக மையங்கள் A,B,C,D என்ற ஒழுங்கு முறையில் தரப்பட்டுள்ளது. அவற்றிற்குரிய நாடுகளை அதே ஒழுங்கில் தருக. (4 புள்ளிகள்)

A - கெலிகட் B- பத்தேவியா

C - சந்திநாகூர் D- கல்கத்தா

iii. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த அரசியல் நிலமைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோள்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

(6 புள்ளிகள்)

## பகுதி III

08. i. மறுமலர்ச்சிக்காலத்தில் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியின் விளைவாகத் திருச்சபையில் இருந்த குறைபாடுகளை விமர்சித்த மூவரின் பெயரைத் தருக. (3 புள்ளிகள்)

ii. கி.பி 1453 இல் கொன்ஸ்தாந்தி நோபிள் துருக்கியரால் கைப்பற்றட்டமையால் , புதிய கடல் பாதையைக் கண்டு பிடிப்பதற்கான தேவை ஏற்பட்டது. இதற்குச் சாதமாக இருந்த காரணிகள் இரண்டு தருக.
(4 புள்ளிகள்)

iii. மறுமலர்ச்சிக்கு காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

09. i. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட மூன்று துறைகளையும் தருக. (3 புள்ளிகள்)

ii. 18ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்த நான்கு ஐரோப்பிய நாடுகளைத் தருக. (4 புள்ளிகள்)

iii. கைத்தொழிற்புரட்சி இலங்கையில் ஏற்படுத்திய செல்வாக்கினை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட மூன்று விளைவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(6 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education



The National e-learning Portal for The General Education

